இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"கிறிஸ்துவின் மீதான விசுவாசம், இறந்த விசுவாசிகளுடனான நமது பிணைப்பு முறிந்துபோகவில்லை, மாறாக அது உருமாறியுள்ளது என்பதை நமக்கு உணர்த்துகிறது" என்று கூறித் திருத்தந்தை விசுவாசிகளுக்கு நம்பிக்கையளித்தார்.

அன்னைமார்களின் கண்ணீர் ஆயுதங்களின் சத்தத்தை மௌனமாக்கட்டும் என திருத்தந்தை ஜெபம்



இறந்த விசுவாசிகள் அனைவரையும் நினைவுகூரும் நாளான கல்லறைத் திருநாளன்று, உரோமையில் உள்ள வெரானோ (Verano) கல்லறையில் திருத்தந்தை பதினான்காம் லியோ திருப்பலி நிறைவேற்றினார். கிறிஸ்துவில் நாம் வைத்துள்ள விசுவாசத்தின் வழியாக, இறந்தோருடனான நமது உறவு முறிந்துபோவதில்லை; மாறாக, அது உருமாறுகிறது என்பதை அவர் நினைவுபடுத்தினார்.

அங்குள்ள மிகப் பழமையான கல்லறைகளில் ஒன்றில் திருத்தந்தை லியோ மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தனது மறையுரையில், நவம்பர் 1 அன்று கொண்டாடப்பட்ட புனிதர்கள் அனைவரின் பெருவிழாவிற்கும் இந்நாளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிட்ட திருத்தந்தை, அது "நமது ஜெபத்திற்கு சரியான திசையைக் காட்டுகிறது" என்றார்.

"நமது விண்ணகத் தந்தையை நோக்கி மன்றாடுவோம்," என்று கூறிய அவர், "ஏற்கனவே அவருடைய ஏராளமான பிள்ளைகள் அனுபவித்து வரும் புனிதமான மற்றும் பேரின்பமான வாழ்வு, அமைதியில் துயிலும் அனைத்து ஆன்மாக்களையும் சூழ்ந்துக்கொள்ள வேண்டும் என இறைவனை வேண்டுகிறோம்" என்றார்.

நீதிமான்களின் ஆன்மாக்களை "எந்த வேதனையும் தீண்டாது" என்று திருவிவிலியத்தில் அளிக்கப்பட்ட "மீட்பின் வாக்குறுதியை" அவர் நினைவுபடுத்தினார்.

"இறைவனின் தந்தைக்கே உரித்தான உறுதியான கரங்கள் அவர்களை என்றென்றும் தாங்கிப் பிடிக்கின்றன. இதன் மூலம், விவிலியத்தில் இறைவன் தனது மக்களுக்கு வாக்குறுதி அளித்த அந்த நித்திய உறவையும் வாழ்வையும் அவர்கள் முழுமையாக அனுபவிக்க முடிகிறது," என்று அவர் தொடர்ந்தார்.

இறந்தவர்கள் அனைவரும் இறைவன் அளித்த வாக்குறுதியின்படி "நித்திய வாழ்வின் நற்தோழமையில்" பங்கெடுக்க வேண்டும் என்பதே நமது ஜெபம்.

'மலைப்பொழிவு பேறுகள்' (Beatitudes) என்பவை "இயேசு தம சீடர்களுக்கு தாமே வழங்கும் தம் சொந்த முகவரி அல்லது அடையாளம்" என்றார். மேலும், "இப்போதும் எப்போதும் முழுமையான வாழ்வைப் பெறுவதற்கான வழியே இந்த பேறுகள் ஆகும்" என்று விளக்கினார்.

அடிவானத்தில் துயரப்படுவோர் ஆறுதல் பெறுவர் என்ற பேற்றை சிறப்பாக சுட்டிக்காட்டிய திருத்தந்தை லியோ, அண்மையில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்காக, "குறிப்பாக கொளரமான போரின் வன்முறையால் தங்கள் அன்பானவர்களைப் பறிகொடுத்தவர்களுக்காக" நாம் சிறப்புற ஜெபிக்க வேண்டும் என்றார்.

"அவர்களின் கண்ணீர், ஆயுதங்களின் சத்தத்தை மௌனமாக்கும்; அதிகாரம் கொண்டவர்களின் மனசாட்சியைத் தொடுவதாக!" என்று உருக்கமாக ஜெபித்தார்.

இறுதியாக, அசிசியின் புனித பிரான்சிஸ் தனது படைப்புகளின் கீதத்தில் (Canticle of the Creatures) சேர்த்த ஒரு பேற்றை திருத்தந்தை லியோ நினைவுகூர்ந்தார்: "சாவான பாவத்தில் இறப்பவர்களுக்கு ஐயோ கேடு! உமது திருவுளத்தை நிறைவேற்றி வாழ்பவர்கள் பேறுபெற்றோர்கள், ஏனெனில் இரண்டாம் சாவு அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது."

"கிறிஸ்துவின் மீதான விசுவாசம், இறந்த விசுவாசிகளுடனான நமது பிணைப்பு முறிந்துபோகவில்லை, மாறாக அது உருமாறியுள்ளது என்பதை நமக்கு உணர்த்துகிறது" என்று கூறித் திருத்தந்தை விசுவாசிகளுக்கு நம்பிக்கையளித்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

ஒரே திருஅவை, ஒரே சமூகப் பணி, ஒரே மலேசியா

காரித்தாஸ் மலேசியா குறித்து மலேசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் ஆயர் மடல்.

இறைவனின் அன்பான மக்களே,

நமது தேசத்தின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையான தருணத்தில் இன்று உங்களுக்கு எழுதுகிறோம். மலேசியா விரைவான உருமாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது; இந்த உருமாற்றம், புதிய வாய்ப்புகளையும் ஆழமான பலவீனங்களையும் ஒருசேரக் கொண்டுவருகிறது. பொருளாதாரம் வளரும்போதும், தொழில்நுட்பம் நமது வாழ்க்கையை மாற்றியமைக்கும்போதும், திருஅவையாகிய நாம் இந்த முன்னேற்றத்தின் மனசாட்சியாகவும் இதயமாகவும் இருக்க அழைக்கப்படுகிறோம்.

திருத்தந்தை 14-ஆம் லியோ தனது அண்மைய சுற்றுமடலான மகத்தான மனிதநேயம் (Magnifica Humanitas)-இல் நினைவூட்டுவது போல, திருஅவையின் சமூகப் பணி என்பது விருப்பத் தேர்வுக்குரிய ஒரு கூடுதல் அம்சம் அல்ல; அது நமது அழைத்தலின் மையப்பகுதியாகத் திகழ்கிறது. "நாம் எங்கே செல்கிறோம்? எந்த இலக்கை நோக்கி நம்மை வழிநடத்திக்கொள்ள விரும்புகிறோம்? ஒரு மக்களாகவும் மனிதச் சமூகமாகவும் நாம் எந்தத் திசையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?" என்று அவர் நம்மை வினாக்களால் சவால் விடுக்கிறார்.

வேற்றுமையில் ஒற்றுமைக்கான அழைப்பு

"உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்." என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு நினைவூட்டுகிறார் (1 கொரிந்தியர் 12:12).

தீபகற்பப் பகுதியின் (Peninsula) பரபரப்பான நகரங்கள் முதல் சபா மற்றும் சரவாக் (கிழக்கு மலேசியா) பகுதிகளின் துடிப்பான சமூகங்கள் வரை பரவியுள்ள நமது ஒன்பது மறைமாவட்டங்கள், கலாச்சாரம், மொழி மற்றும் அனுபவங்களின் ஒரு அழகான கலவையாகத் திகழ்கின்றன. ஆயினும், தொழில்நுட்ப பிளவு, குறுகிய கால வேலை/'கிக்' (gig) முறைமை சார்ந்த தொழிலாளர்களின் சிரமங்கள், புலம்பெயர்ந்தோரின் துயர நிலை மற்றும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் நிச்சயமற்ற தன்மை என நமது தேசம் சந்திக்கும் சவால்கள், மறைமாவட்ட எல்லைகளுடன் நின்றுவிடுவதில்லை என்பதை நாம் உணர்கிறோம்.

மலேசியாவில் நமது சமூகப் பணி என்று வரும்போது, ஒவ்வொரு மறைமாவட்டமும் சிறப்பாகச் செயல்பட்டு வந்திருந்தாலும், இதுவரை நாம் தனித்தனி முயற்சிகளின் தொகுப்பாகவே இயங்கி வந்துள்ளோம். இன்று, நாம் ஒரு மாறுபட்ட பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளோம். தனித்தனியாகச் செயல்படும் நிலையிலிருந்து மாறி, ஒரே உடலாகச் செயல்படும் நிலையை நோக்கி நாம் நகர்கிறோம். நமது மறைமாவட்ட வாழ்வின் அடையாளமாகத் திகழும் உள்ளூர் முயற்சிகளை மாற்றுவதற்காக அல்லாமல், அவற்றை வலுப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், மற்றும் தேசிய அளவிலான உரையாடல்களில் திருச்சபையின் சார்பில் ஒரு நம்பகமான குரலை ஒலிக்கச் செய்யவும், காரித்தாஸ் மலேசியா (Caritas Malaysia) அமைப்பை நமது ஒருங்கிணைந்த தேசிய சமூகப் பணி அமைப்பாக நாம் மேம்படுத்தி வருகிறோம்.

அனைத்திற்கும் மேலாக, கிறிஸ்துவின் அன்பின் முகத்தை அனைவருக்கும் வெளிப்படுத்தும் சமூகப் பணியில் ஒரு தேசிய இயக்கமாக இணைந்து செயல்பட முன்வருமாறு இறைமக்களை அழைக்கிறோம். நமது சமூகப் பணித் திட்டங்களின் வழியாக மக்கள் அன்பையும் அரவணைப்பையும் பெறும் வகையிலான 'சந்திப்புத் திட்டங்களை' (projects of encounter) ஆக்கப்பூர்வமாகவும் உற்சாகத்துடனும் செயல்படுத்தவும், அதன் மூலம் நம் நகரங்களிலும் கிராமங்களிலும் பரஸ்பர அன்பின் இயக்கத்தை உருவாக்கவும் புதியதொரு செயல்பாட்டிற்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

நமது நாடு எதிர்கொள்ளும் சவால்கள்

காலத்தின் அறிகுறிகளை நாம் நேர்மையுடன் உற்றுநோக்க வேண்டும். 2025-ஆம் ஆண்டில் மலேசியா 87.4 பில்லியன் ரிங்கிட்டிற்கும் அதிகமான தொழில்நுட்ப முதலீடுகளை ஈர்த்ததுடன், 5 சதவீதத்திற்கும் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியையும் கண்டது; இருப்பினும், இந்த வளம் அனைவருக்கும் சமமாகச் சென்றடையவில்லை.

- தற்காலிகப் பணிப் பொருளாதாரம்: 16 லட்சத்திற்கும் அதிகமான மலேசியர்கள் தற்காலிகப் பணிப் பொருளாதாரத்தில் பங்கேற்கின்றனர்; இது பெரும்பாலும் அவர்களின் பெயர்களையோ அல்லது போராட்டங்களையோ அறியாத 'அல்காரிதம்களால்' நிர்வகிக்கப்படுகிறது. சட்டம் அவர்களின் ஒப்பந்தங்களைப் பாதுகாக்கலாம், ஆனால் திருச்சபையால், கடவுள் அவர்களுக்கு அளித்த கண்ணியத்தைப் பாதுகாக்க வலியுறுத்த முடியும்.
- விளிம்புநிலைச் சமூகங்கள்: நமது உள்கட்டமைப்பை உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றிய புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளான நமது சகோதர சகோதரிகள் முப்பது லட்சத்திற்கும் அதிகமானோர் தொழில்நுட்ப பாதுகாப்பு வலைப்பின்னல்களின் வரம்பிற்கு அப்பால், ஓரங்கட்டப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.
- நமது இளைஞர்கள்: ஏறக்குறைய 35% பட்டதாரிகள் தாங்கள் பயின்ற துறை சாராத பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்; மேலும், செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த பொருளாதார அமைப்பினால் நிரந்தரமாக ஓரங்கட்டப்படும் அபாயத்தை அவர்களில் பலர் எதிர்கொள்கின்றனர்.

இவை வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல; இவர்கள் நம் சகோதர சகோதரிகள்.

திருத்தந்தை பதினான்காம் லியோ நமக்குக் கற்பிப்பது போல, பொருளாதாரம் மனிதருக்கு எதிராகத் திரும்பும்போது, திருஅவை தனது குரலை ஒலிக்கச் செய்ய வேண்டும்; அது ஆதிக்கம் செலுத்துவதற்காக அல்ல, மாறாக ஒன்றிப்பை வளர்ப்பதற்காகவே.

உங்கள் அர்ப்பணிப்பை அங்கீகரித்தல்

நமது சமூகப் பணிகளில் அயராது உழைத்து வரும் ஆயிரக்கணக்கான மலேசிய கத்தோலிக்கர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். பசியால் வாடுவோருக்கு உணவு வழங்குவோர் முதல், புலம்பெயர்ந்தோரின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்போர் மற்றும் அடுத்த தலைமுறையை வலுப்படுத்தும் இளைஞர் தலைவர்கள் வரை உங்கள் அர்ப்பணிப்பு புனித பேதுருவின் பின்வரும் வார்த்தைகளுக்குச் சான்றாக அமைகிறது: "நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள்கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே, உங்களுள் ஒவ்வொருவருக்கும் தாம் பெற்றுக் கொண்டு அருள்கொடையைப் பயன்படுத்தி, பணிபுரியுங்கள்." (1 பேதுரு 4:10).

ஒருவருக்கொருவர் நீங்கள் 'அன்பின் நாகரிகம்' (Civilisation of Love) என்பதன் செயல்வழமாகத் திகழ்கிறீர்கள். உங்கள் அர்ப்பணிப்பு உணர்வே 'காரித்தாஸ் மலேசியா'வின் (Caritas Malaysia) இந்தப் புதிய அத்தியாயம் கட்டமைக்கப்படுவதற்கான அடித்தளமாக அமைந்துள்ளது.

தேசிய அளவிலான, ஒருங்கிணைந்த காரித்தாஸ் (Caritas) அமைப்பை நோக்கிய இந்தப் பயணத்தை நாம் பணிவுடனும் நம்பிக்கையுடனும் தொடங்குகிறோம். மக்களுடன் உடனிருந்து செயல்படும், முன்முயற்சி எடுக்கும் மற்றும் ஒற்றுமையுடன் திகழும் ஒரு திருஅவையாகத் திகழ நாம் தீர்மானித்துள்ளோம். இப்பணிக்காக இறைவனை வேண்டுமாறும், இம்முயற்சியில் உங்கள் நேரம், திறமைகள் மற்றும் குரல் ஆகியவற்றை அளித்து உதவுமாறும் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு மனிதரின் கண்ணியமும் மதிக்கப்படும், மேலும் இறைவனின் அன்பு என்பது வெறும் போதனையாக மட்டுமல்லாமல் ஒவ்வொரு மலேசியருக்காகவும் நாம் வாழ்ந்து காட்டும் ஒரு நிஜமான அனுபவமாகவும் திகழும் ஒரு தேசத்தை நாம் ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்.

மனமார்ந்த நன்றியுடனும் ஆசீர்வாதங்களுடனும்,
பேராயர் டத்தோ டாக்டர் சைமன் போ
தலைவர், மலேசிய கத்தோலிக்க ஆயர் பேரவை (CBCM)
15 நவம்பர் 2026 - உலக ஏழைகள் தினம்

கோப்பேங் புனித யூதா பெருவிழா

இந்த ஆண்டு புனித யூதா பெருவிழாவிற்கு ஆயத்தமாக நடைபெற்ற மூன்று நாள் மும்பெரும் விழா (Triduum) திருப்பலிகள், கத்தோலிக்கர்கள் பெயரளவில் மட்டும் வாழும் "பெயரளவு கத்தோலிக்கர்களாக" இருப்பதை நிறுத்திவிட்டு, அன்பின் வழியில் தங்கள் விசுவாசத்தில் எவ்வாறு வளரலாம் என்பதை மையமாகக் கொண்டு அமைந்திருந்தன.

"கனி தரும் விசுவாசம்" என்ற முதன்மை மையப்பொருளுடன் அக்டோபர் 22 முதல் 24 வரை நடைபெற்ற ஜெபமாலை, புனித யூதா நவநாள் மற்றும் திவ்ய நற்கருணைத் திருப்பலி ஆகிய மூன்று நாள் நிகழ்வுகளும் ஆன்மீக நிறைவைத் தந்தன. திருப்பலிக்கு முன்பாக ஒப்புரவு அருட்சாதனமும் வழங்கப்பட்டது.

பத்து காஜா, புனித யோசேப்பு தேவாலயப் பங்குத்தந்தை அருட்பணி பிரான்சிஸ் ஆண்ட்ரூ, "நான் தீ மூட்ட வந்தேன்" என்ற முதல் நாள் துணை மையப்பொருளில் மறையுரையாற்றினார். விவிலியத்தில் தீ என்பது கடவுளின் பிரசன்னத்தைக் குறிக்கிறது என்றும், அது நம்மைப் புடமிட்டுத் தூய்மைப்படுத்தும் போது மக்களை அழிக்கவும் பிரிக்கவும் கூடும் என்றும் அவர் கூறினார். "தீமைக்கு எதிரான கடவுளின் தீர்ப்பும், நம்மைத் தூய்மைப்படுத்தும் கடவுளின் வல்லமையும் நமக்குள் மாற்றத்தைக் கொண்டுவரும்.

கத்தோலிக்கர்களாகிய நாம் சரியான வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; நேர்மறையான மாற்றத்தையும் நம்பிக்கையையும் கொண்டு வர வேண்டும். மேலும், இறைமக்களின் இதயங்களில் கிறிஸ்துவைப் பறைசாற்றும் ஆர்வத்தை மூட்ட வேண்டும். முதலாவதாக, விவிலியத்தை வாசிப்பதன் மூலமும், திவ்ய நற்கருணை ஆராதனையில் இறைவனுடன் நேரம் செலவழிப்பதன் மூலமும் உங்கள் விசுவாசத்தை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். விசுவாசத்தை உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்துங்கள்; பாவம், மனந்திரும்புதல் மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வோடு இருங்கள். இயேசுவைப் போலத் தாழ்ச்சியுள்ளவர்களாக இருங்கள்" என்று அவர் கூறினார்.

சித்தியாவான், புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் தேவாலயப் பங்குத்தந்தையும், அருட்பணியாளருமான ஸ்டான்லி அந்தோணி, "அன்போடு ஒருவரையொருவர் தாங்குங்கள்" என்ற துணை மையப்பொருளில் தர்மக் காரியத்தின் (அன்புப் பணி) எல்லைகளைப் பற்றிப் பேசினார்.

அவர் தனது ஆழமான, நடைமுறைக்கு உகந்த மறையுரையில், நமது விசுவாசத்தையும் கடவுளின் அன்பையும் வெளிப்படுத்தும் வகையிலான தர்மக் காரியத்தைச் செய்ய, நமது எல்லைகளுக்கு அப்பால் உள்ளவர்களையும் சென்றடைவது முக்கியம் என்று கூறினார். பெரும்பாலும், நாம் உள்ளூர்வாசியா அல்லது வெளிநாட்டவரா, நீல காலர் (உடலுழைப்பு) தொழிலாளர்களா அல்லது வெள்ளை காலர் (அலுவலக) தொழிலாளர்களா என்ற குழுயுரிமை மற்றும் மத அடிப்படையிலான நமது "எல்லைக்குட்பட்ட மக்களுக்கு" மட்டுமே தர்மக் காரியத்தைச் செய்கிறோம்.

"நாம் வகுக்கும் இந்த எல்லையை நம் பிள்ளைகள் பார்க்கிறார்கள்; நமது தர்மக் காரியத்தில் யாரைச் சேர்ப்பது அல்லது யாரைத் தவிர்ப்பது என்பதில் நம்மையே பின்பற்றுகிறார்கள். ஏனெனில் கடவுள் அனைவருக்கும் தந்தை என்பதை அவர்கள் அறிவார்கள்," என்று அவர் கூறினார்.

கம்பார், திரு இருதய தேவாலயப் பங்குத்தந்தை அருட்பணி சைமன் ஆனந்த், இன்றைய நுகர்வோர் சமுதாயத்தைப் பற்றியும், நம் நாட்டில் உள்ள அன்னியரையோ அல்லது நம்மை விட எளியவர்களையோ நாம் தவறாகப் பயன்படுத்தாதவாறு எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் பேசினார். மூன்றாம் நாள் மும்பெரும் விழாத் திருப்பலி, திருப்பாடல்கள் 122:1-ல் உள்ள "ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பு எனக்கு மகிழ்ச்சியளித்தது" என்ற வசனத்தை அடிப்படையாகக் கொண்டும், நமது வாழ்வில் மகிழ்ச்சியை எவ்வாறு கண்டடைவது என்பது பற்றியும் அமைந்தது.

இசாபெல் ஜோசப்



10-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் தைப்பிங் பங்கு இளையோர் மன்றம் (PYC)

"ஆண்டவர் இதைச் செய்துள்ளார்; நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று." – திருப்பாடல்கள் 118:23-24



தைப்பிங் பங்கு இளையோர் மன்றம் (Parish Youth Council - PYC) தனது 10-ஆம் ஆண்டு நிறைவு விழாவை 2026 அக்டோபர் 24 அன்று நன்றியுணர்வோடு கொண்டாடியது. கடந்த பத்தாண்டு கால விசுவாசம், இறைப்பணி மற்றும் இளையோரின் நற்புறவை மையமாகக் கொண்டு இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

2015-இல் இளைஞர்கள் மணிலாவிலிருந்து திரும்பிய பிறகு, அன்றைய பங்குத்தந்தை மாண்புமிகு ஜூட் மிராண்டா (Msgr. Jude Miranda) அவர்களின் வழிகாட்டுதலில், தைப்பிங் கத்தோலிக்கத் திருஅவையின் அனைத்து இளையோர்களையும் — பீடப்பணியாளர்கள், பல்வேறு மொழிப் பிரிவுகளின் இளைஞர்கள் மற்றும் மறைக்கல்வி இளைஞர்கள் அனைவரையும் — 'PYC' என்ற ஒரே குரையின் கீழ் ஒருங்கிணைக்கும் முயற்சி தொடங்கப்பட்டு, 2016-இல் வெற்றிகரமாக அமைக்கப்பட்டது.

கடந்த பத்தாண்டு காலப் பணிகளை நினைவுகூர்ந்தும், எதிர்காலப் பணிகளுக்கான பார்வையோடும், முன்னாள் மற்றும் இந்நாள் இளையோர் தலைவர்களும் உறுப்பினர்களும் இந்த மைல்கல் இரவு விருந்தில் மகிழ்ச்சியோடு ஒன்றுகூடினர்.

விழாவில் உரையாற்றிய பங்குத்தந்தை அருட்பணி ஸ்டீபன் லியூ (Rev. Msgr. Stephen Liew), திருஅவையை இளமையாகவும் உயிரோட்டமாகவும் வைத்திருக்கும் இளையோரைப் பாராட்டி ஊக்கமளித்தார்.

"நம் பங்கினை என்றும் இளமையோடும் சுறுசுறுப்போடும் வைத்திருக்கும் அனைத்து இளைஞர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். உங்கள் செயல்பாடுகளுக்கும், பங்குக்கும் எனக்கும் நீங்கள் அளித்து வரும் ஆதரவிற்கும் நன்றி. நீங்கள எல்லாரும் இப்படியே எப்போதும் துடிப்போடு வாழ இறைவனை வேண்டுகிறேன்," என்று கூறி வாழ்த்தினார்.

தொழில்நுட்ப வளர்ச்சியும் எதிர்மறை எண்ணங்களும் நிறைந்த இக்காலத்தில் இளைஞர்கள் சந்திக்கும் சவால்களைப் பற்றிப் பேசிய பங்குத்தந்தை, "அஞ்சாதீர்கள்" என்ற திருஅவைத் தலைவர்களின் வார்த்தைகளை நினைவூட்டினார்.

"'அஞ்சாதீர்கள்' என்பதே நமக்கு எப்போதும் சொல்லப்படும் வார்த்தை. இன்று இளைஞர்கள் அபாயகரமான அதே வேளையில் சாகசங்கள் நிறைந்த ஒரு காலத்தில் வாழ்கிறார்கள். ஆனால் எதுவாக இருந்தாலும் நாம் பயப்படத் தேவையில்லை; ஏனெனில் நாம் ஒருபோதும் தனித்து பயணிப்பதில்லை. நம் மூத்த சகோதரரான இயேசுவோடும், சகோதர சகோதரிகளாகிய நம்மோடும் இணைந்து பயணிக்கிறோம் என்பதே நமக்கு பெரிய ஆறுதல்," என்றார்.

புனித யூதா தேவாலயத்தின் பாதுகாவலர் பெருவிழாக் கொண்டாட்டம்

ரவாங்: மழை பெய்து குளிராக இருந்தாலும், ரவாங் புனித யூதா தேவாலயப் பங்கு விசுவாசிகளின் ஆன்மீக உற்சாகத்தை கன மழை வானிலையால் குறைக்க முடியவில்லை என்றே சொல்லலாம். கடந்த அக்டோபர் 16 அன்று, 9 நாள் நவநாளின் முதல் நாளைத் தொடங்கும் விதமாக, அருட்பணியாளர்கள் சைமன் லேப்ரோய், ஜொனாதன் ராவ், அந்தோணி ராபர்ட் மற்றும் திருத்தொண்டர் ஜோசப் தான் ஆகியோருடன் இணைந்து இறைமக்களும் யாத்திரிகளும் நின்றனர் கலந்துக் கொண்டனர்.

பினாங்கில் உள்ள காலேஜ் ஜெனரல் குருத்துவக்கல்லூரியிலிருந்து 4 புனிதர்களின் திருப்பண்டங்கள் (Relics) கடனாக வந்து சேர்ந்த்ததைப் பங்குத்தந்தை அருட்பணி சைமன் லேப்ரோய் அறிவித்தபோது, விசுவாசிகளின் மகிழ்ச்சி இரட்டிப்பானது. அவற்றில் புனித யூதா ததேயுவின் முதல் நிலைத் திருப்பண்டமும் ஒன்றாகும். மற்றவை திருத்தூதர்களான புனித யோவான், புனித அந்திரேயா மற்றும் புனித தோமா ஆகியோரின் திருப்பண்டங்கள் ஆகும்.

நம்பிக்கையிலும் ஜெபத்திலும் ஒன்றிணைந்த விசுவாசிகள், தினமும் நற்கருணைப் வழிபாட்டில் கலந்துக் கொண்டு கடவுளின் வார்த்தையிலிருந்து ஆற்றலைப் பெற்றனர். ஒவ்வொரு நவநாள் திருப்பலியும் ஒரு துணை மையப்பொருளுடன் தொடங்கியது. முதல் நாளில், "பயப்படாதே - நீ கடவுளுக்கு விலையேறப்பெற்றவன்" என்ற தலைப்பு, மக்களின் நம்பிக்கையைப் புதுப்பித்து நம்பிக்கையை



அளித்தது. நம்பிக்கை என்பது ஒரு பயணம்; அதில் யாரும் தனியாக நடக்கப்போவதில்லை. தொடர்ந்த ஒவ்வொரு நாளின் துணைத் தலைப்புகளும், "ஒவ்வொரு கூப்பிய கரங்களின் பின்னாலும், சிந்திய அமைதியான கண்ணீரின் பின்னாலும் ஒரு நம்பிக்கை இருக்கிறது; கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்" என்பதை மக்களுக்கு உறுதியளித்தன. கடவுள் அமைதியிலும் எப்போதும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். புனித யூதா வெறும் கிறிஸ்துவைப் பின்பற்றியவர் மட்டுமல்ல, நம்பிக்கையற்றதாகத் தோன்றும் இந்த உலகிற்கு கடவுளின் மீட்பின் செய்தியைக் கொண்டு சென்ற கிறிஸ்துவின் திருத்தூதர் என்பதை அனைவரும் நினைவில் கொண்டனர். புனித யூதாவின் பரிந்துரையால் தங்கள் ஜெபங்கள் கேட்கப்பட்ட சாட்சியங்களைப் பலர் பகிர்ந்துக் கொண்டனர்.

மெர்சி அல்மேடா ஸ்டெல்லஸ்

பொதுக்காலம் ஆண்டின் 33 ஆம் ஞாயிறு – (உலக ஏழைகளின் நாள்)

கடவுளின் கொடைகளும் நம்முடைய பொறுப்பும்.

நீதிமொழிகள் 31:10-13, 19-20, 3-31
திபா 128:1-2, 3, 4-5; தெசலோனிக்கர் 5:1-6
மத்தேயு 25:14-30

கிறிஸ்துவின் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் சமாதானம். இன்றைய வாசகங்கள் அனைத்தும், கடவுளிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட கொடைகள், திறமைகள் அனைத்தையும் பாராட்டி ஏற்றுக்கொள்ளவும், அவற்றை நாம் மட்டுமே அனுபவிக்காமல் பிறருக்கும் பயனளிக்கும் வகையில் பகிர்ந்துகொள்ளவும் அழைக்கப்படுகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் திறமையுள்ள மனைவியைப் பற்றி வாசிக்கிறோம். கணவனின் நம்பிக்கையைப் பெற்றவள், திறமையானவள், அதுமட்டுமல்லாமல் எளியவருக்கும் வரியவருக்கும் உதவி செய்பவள். ஏனென்றால் குடும்பத்தில் மனைவி திறமையும் இறை அச்சமும் கொண்டிருந்தால், அந்தக் குடும்பம் நிச்சயமாக, நிறைவுள்ள குடும்பமாக திகழும். இந்தக் குணங்களைத் தான் நாமும் கொண்டிருக்கவேண்டும். சுயநலமின்றி வாழும் வாழ்க்கை, இறை அச்சம் ஆகியவை நாம் பின்பற்றவேண்டியதொன்று. வெளிப்பகட்டைவிட கடவுள் மீதுள்ள அச்சமும், சுறுசுறுப்பான உழைப்பும், பிறரன்புப்பணியுமே ஒருவரின் வாழ்க்கைக்கு உண்மையான மதிப்பையும், கடவுளின்ஆசீரையும் தருகின்றன.

இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், ஆண்டவருடைய வருகை எதிர்பாராத நேரத்தில் வரும் என்று எச்சரிக்கை விடுக்கிறார். எனவே ஒளியின் மக்களாகவும், அதே வேளையில் விழிப்போடும், தெளிவோடும் இருக்க அழைப்பு விடுக்கிறார். ஆண்டவர் எப்போது நம்மை அழைத்தாலும், ஆன்மீக விழிப்புடனும், அறிவுத்தெளிவுடன் இருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகமானது மிகவும் பிரபலமான ஒரு உவமை. கடவுள் நம் திறமைகளுக்கேற்ப தரும் கொடைகளும் அதனால், நாம் கொண்டிருக்கும் பொறுப்பையும் பற்றி இன்றைய நற்செய்தி உவமை கூறுகிறது. நாம் பெற்றுக்கொண்டவற்றை வைத்து உழைத்து அதை பெருக்க வேண்டும். இதில் நாம் சோம்பலாகவோ, முயற்சிசெய்ய பயந்துகொண்டோ இருந்தால் நிச்சயம் நாம் கணக்குக் கொடுக்க வேண்டியிருக்கும்.

1. கடவுளின் கொடைகளும் நமது பொறுப்பும்: நம் தலைவராகிய இயேசு, நம் ஒவ்வொருவருக்கும் அவரவர் திறமைக்கு ஏற்ப தாலந்துகளைத் (வாழ்வின் கொடைகள், திறமைகள், அன்பு, நம்பிக்கை, நேரம்) தந்துள்ளார். இங்கு தாலந்தினுடைய எண்ணிக்கை முக்கியமல்ல; அதை நாம் எவ்வாறு வளர்த்துப் பலன் அளிக்கிறோம் என்பதே முக்கியம்.
2. பயத்தையும் சோம்பலையும் கடந்து செல்லுதல்: ஒரு தாலந்தைப் பெற்ற பணியாளன், தன் தலைவனைக் கடின உள்ளம் கொண்டவன் என்று தவறாகப் புரிந்து கொண்டு, பயத்தின் காரணமாகத் தன் தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தான். பயமும், எதிர்மறை எண்ணங்களும் நம்மிடம் உள்ள திறமைகளை முடக்கிவிடும். கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது பலனை மட்டுமல்ல, நம் உண்மை அன்பையும் உழைப்பையுமே. கொடைகளைப் பயன்படுத்தாமல் வைத்திருப்பது கடவுளின் அருளை அலட்சியப்படுத்துவதற்குச் சமம்.

இன்று நாம் நினைவுகூரும் உலக ஏழைகளின் தினத்தை, நாம் இன்று ஒரு நாள் மட்டுமல்ல, நமக்கிருப்பவற்றில் இருந்து இல்லாதவரோடு நம்மால் முடிந்தபோதெல்லாம் பகிர்ந்துக் கொள்வோம். நமக்கு மிஞ்சியது அல்ல, நமக்கிருப்பவற்றிலிருந்து தருவது தான் உண்மையான பரிவு என்பதை நாம் உணர்ந்துகொள்வோம்.

நம் திறமைகளைப் பிறர் நலனுக்காகவும், இறைமாட்சிமைக்காகவும் பயன்படுத்துவோம். ஆண்டவர் மீண்டும் வரும்போது, "நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே! என் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும்" என்ற ஆசீரைப் பெற நம்மையே தகுதிப்படுத்துவோம்.

ஜோஸ்பின் போஸ்கோ, சிரம்பான்

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015